# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

S.C. 141/2017

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை PW1–இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW1 Examined as PW1

| | | |
|---|---|---|
| Date | : | 12.10.2023 |
| Name | : | செந்தில்குமார் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>
முதல் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.

நான் தற்போது ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் சிறப்பு புலனாய்வு பரிவியில் சென்னையில் காவல் ஆய்வளராக பணியாற்றி வருகிறேன். ஆஜர்எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2012 ம் ஆண்டு சீர்காழி வட்ட காவல்ஆய்வாளராக பணியாற்றியபோது 12.08.2012 அன்று காவல் துணை கண்காணிப்பு சீர்காழி அவர்களின் உத்தரவின்பேரில் திருவெண்காடு காவல்நிலைய எல்லையில் உள்ள புதுத்துறை கிராமத்தில் திரு. மணிசங்கர்அய்யர் எம்.பி அவரகளின் மக்கள் குறை தீர்க்கும் நாள் நிகழ்ச்சிக்கு பாதுகாப்பு பணிக்காக நியமிக்கப்பட்டு பாதுகாப்பு பணி முடித்து சீர்காழி காவல் நிலையத்திற்கு திரும்பிக்கொ்ணடிருந்தபோது மாலை சுமார் 4.00 மணியளவில் திருவாலி ஏரிக்கரை பிரிவு ரோடு அருகில் சிறிய

பாலம்ஒன்றுஇருந்தது. அந்த பாலத்தின் அருகில் என்னுடைய காவல்வாகனம் TN51G 0373 டாட்டா சுமோ வாகனத்தில் கடந்த செல்லும்போது சாலையின் குறுக்கே இரு சக்கர வாகனத்தை நிறுத்திக்கொண்டு பின்னால்பெயர் விலாசம் கேட்டுதெரிந்த இளையராஜா மற்றும் கார்த்திக் கோட்டகம் கிராமத்தை சார்ந்தவர்கள் வண்டியின ஹாரன் அடித்தும் வழி விடாமல்நின்றுக்கொண்டிருந்ததால் இறங்கி என்னவென்று கேட்க போலீஸ்காரர்கள் எ்னறால் பெரிய மயிரா என்று புண்டமகனே நானும் மிலிட்ரிக்காரன்தான்டா உங்களை எல்லாம் கொல்லாமல் விடக்கூடாது என்று என் அப்பாவும் அம்மாவும் சாராயம் விற்றபோது அவர்களை பிடித்து ஜெயிலில் போட்டீர்கள் என்றும்உங்களை எல்லாம் பிடித்து அடித்தால் என்ன என்று இத்தோடு ஒழிந்துபோடா என்று இரும்பு கம்பியால்தலையில் அடிக்க என்னுடைய இடது கையால் அதை தடுக்க என்னுடைய இடது கண் புருவத்தில் கம்பி பட்டு காயம்பட்டு ரத்தம் பொள பொள என்று கொட்டியது. அத்துடன் அருகில்இருந்த கார்த்திக் குச்சிக்கார மகனே எல்லாம் சும்மா விடக்கூடாது என்று சொல்லி அருகில்இருந்த கட்டகம்பு எடுத்து அதை என் இடது கையால் தடுக்க இடது புறம்கையில் காயம்ஏற்பட்டது. அந்த நேரத்தில் என் காவல்வாகனத்தை ஒட்டி வந்த ராஜீவ்காந்தி மற்றும் என்னை தொடர்ந்து வந்த ஆய்வாளர் கார்த்திக்சாமி திருவெண்காடு காவல்ஆய்வாளர் அருகில் ஒடி வர எதிரிகள் இருவரும் என்னைக்கு இருந்தாலும்போலிசை போடுவோம் என்று ஒடிவிட்டார்கள். நான் உடனே என்னுடைய காவல்வாகனத்தில் ஏறி சீர்காழி காவல்நிலையம்வந்து அங்கு ஆஜரில் இருந்த சிறப்பு காவல்உதவி ஆய்வாளர் அன்பழகன் அவர்களை அழைத்துக்கொண்டு சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். சிகிச்சையில் இருக்கும்போது திருவெண்காடு

பயிற்சி உதவி ஆய்வாளர் திரு. ராமச்சந்திரன் என்பவர் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார். அதில்நான் கையொப்பம்இட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அது **.அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இது தொடர்பாக காவல் ஆய்வாளர் திரு. கார்த்திகசாமி என்னை விசாரிக்க நான்நடந்ததை கூறினேன். என்னிடம் காண்பிக்கப்படும் இரும்பு கம்பி மற்றும் கட்டைதான் சம்பவத்தின்போது ஆஜர்எதிரிகள் பயன்படுத்தியது. அது சா.பொ.1 மற்றும் 2 ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் பாதுகாப்பு பணிக்கு உதவி காவல் கண்காணிப்பாளர் வாய்மொழி உத்தரவின்பேரில்தான் சென்றேன். சம்பவ இடத்திலிருந்து திருவெண்காடு காவல் நிலையம் 2,3 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். சம்பவ இடத்திற்குஅருகாமையில் குடியிருப்பு, கடைகள் இருந்ததா என்றால் வயல் இருந்ததாகதான் ஞாபகம். அந்த வயல்வெளியில் ஆட்கள் வேலை பார்த்தார்களா என்றால் அப்போது எனக்குஅடிப்பட்டதால் நினைவு இல்லை, இருந்திருக்கலாம். எனக்கு இரும்பு கம்பியால்அடித்து ரத்தம் வெளியேறியதால் அங்கு ஆட்கள்வேலை பார்த்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. நான் காயம் பட்டதும் சிறப்பு உதவி ஆய்வாளரை அழைத்துக்கொண்டு சிகிச்சைக்காக சென்றேன். அங்கு பயிற்சி உதவி ஆய்வாளர் என்னிடம் புகார் வாக்குமூலம்பதிவு செய்தார். சீர்காழிமருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோதுதான் புகார் வாக்குமூலம்பதிவு செய்யப்பட்டது என்றால்சரிதான். புகார்வாக்குமூலம்ராமச்சந்திரன் எழுதினார். காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார். சம்பவம் நடந்து சுமார் 3 மாதம் கழித்து ஆய்வாளர் காவல்நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார். சீர்காழி மருத்துவமனையில் இரண்டு நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன். மருத்துவனைமயில்இருந்து விடுவிப்பு பெற்றவுடன் காவல்நிலையத்தில் கொடுத்தேனா என்றால் விடுவிப்பு பெற்று காவல்நிலையத்திற்கு சென்று தகவல் அளித்துவிட்டு பின்பு மருத்துவவிடுப்பில் சென்றேன். சம்பவ இடத்திலிருந்து சீர்காழி அரசு மருத்துவமனை 12–15 கிலோ மீட்டர்தொலைவு இருக்கும். சம்பவ இடத்திலிருந்து மருத்துவனைக்கு வர சுமார் 1/2 மணி நேரம் ஆகும். பாதுகாப்பு பணிக்கு எங்கள் காவல்நிலைய ஒட்டுனரை அழைத்துக்கொண்டு நான்மட்டும்தான்சென்றேன். பாதுகாப்பு

பணி முடிந்து வரும்போது என்னுடைய வாகனம் 2ம் எதிரி பைக்கில் மோதிவிட்டது என்றால் அது போன்று சம்பவம் எதுவும் இல்லை. 2ம் எதிரி வாகனத்தை நான் இடித்துவிட்டதால்அது குறிதது கேட்டதற்கு நாங்கள் அவரை அடித்துள்ளோம் என்றால்சரியல்ல. 2ம்எதிரியை அடிப்பது கேள்விபட்டு முதல் எதிரி சம்பவ இடத்திற்கு வந்து எங்களிடம் விவரம் கேட்டார் என்றால் சரியல்ல. அதன்பிறகு எதிரிகளை ஆய்வாளருடன் சேர்ந்து வைத்தீஸ்வரன்கோயில் காவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்றோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது 4.00 மணி 4.30 மணிக்கு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்தேன். நாங்கள் எதிரிகளை காவல்நிலையத்தில் வைத்து உடைகளை கலைத்து காட்டுமிரன்டிதனமாக அடித்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் தாக்கப்பட்டது குறிதது அவர்களின்தாயரர் காவல்துறையின்மீது தனிநபர் வழக்குதொடுத்திருந்தார் என்றால்அது குறித்து தெரியவில்லை., எதிரிகள் என்னை கொலை முயற்சியில் தாக்கவும் இல்லை அதனால்நான் காயம்அ டையவில்லை என்றால் சரியல்ல.இருசக்கர வாகனத்தில்செல்லும்போது கவன்குறைவாக தவறி விழுந்தாலும்அந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றாலும் சரியல்ல. நான்சொல்வதுபோல்சம்பவம் எதுவும்நடைபெறவில்லை என்றாலும் என் அதிகாரத்தை பயன்படுத்தி எதிரிகள்மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தடய பொருட்கள் போலிசாரால் சம்பவம்இடத்திலிருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக போலிசால் சேர்க்கப்பட்டது என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து சீர்காழிமருத்துவமனைக்கு வரும்போது சுயநினைவு இருந்தது. காயத்தில்ரத்தம் வடிந்துக்கொண்டிருந்தது. மருத்துவமனையில் மருத்துவர் பரிசோதனை செய்தபோது சுயநினைவுடன் இருந்தேன் என்றால் சுயநினைவுடன்தான் விபத்து பதிவேட்டுக்கு தகவல் கொடுத்தேன். நான் காவல்துறையுடன் சேர்ந்து எதிரிகளை தாக்கிவிட்டு என்னை தற்காத்துக்கொள்ளும்நோக்கில் எதிரிகள்மீது பொய்யாக வழக்கு போடடுள்ளேன் என்றால்சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் எதிரிகள் மீதுபோடப்பட்டது பொய்யான வழக்கு என்றாலும் சரியல்ல.